போனஸ் திட்டம் தரப்பட்டிருக்கிறது. இதன்படி தரப்படாதவர்கள் 3 பேர்தான். அவர்களும் வந்து கேட்டபிறகு 2 பேருக்குத் தருகிற நிலை இருக்கிறது என்றுதான் நான் முதலில் குறிப்பிட்டேன்.

B.A., B.Sc. Graduates.

* 33. *Q.*—THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any B.A., B.Sc., graduates working in Colleges have been ousted from service during 1971-72; and

(*b*) if so, the names of the colleges in which that was done and the reasons therefor?

பி.ஏ., பி.எஸ்.ஸி. பட்டதாரிகள்

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்லூரிகளில் பணிபுரிந்து வந்த பி.ஏ., பி.எஸ்ஸி பட்டதாரிகள் 1971-72-ம் ஆண்டில் எவரேனும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், எந்தெந்தக் கல்லூரிகளில் என்ன காரணத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) &(இ) கல்லூரி களில் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன், முது கலைப் பட்டப் படிப்பில் முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் தேறி யுள்ளவர்கள் தான் அரசினர் கல்லூரிகளில் போதனாசிரியர்களாகவும் செய் முறை விளக்குநர்களாகவும் நியமனம் செய்யப்படலாம் என்று ஆணை வெளியிடப்பட்டதின் விளைவாக, தகுதியில்லாத 139 பி.ஏ., பி.எஸ்ஸி பட்டதாரிகள் 1971-72-ம் ஆண்டில் 55 கல்லூரிகளிலிருந்து (33 அரசினர் மற்றும் 22 தனியார்) தற்காலிகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாகவே பணியாற்றியிருந்தார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபார்சுகளில் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்ற டியூட்டர், டெமான்ஸ்டிரேட்டர்களுக்கு இடம் வைத்து, அவர்களுக்கு ரூ. 325 அடிப்படைச் சம்பளத்தில் ஒரு ஊதிய

1974 சனவரி 23]

விகிதமும், எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்து டியூட்டர், டெமான்ஸ்டிரேட்டர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 400 அடிப்படைச் சம்பளம் வைத்து ஒரு ஊதிய விகிதமும் ஏற்படுத்தியிருந்தார்கள். அப்படியிருந்தும், இவர்களை இப்போது வெளியே அனுப்பியதற்குக் காரணம் என்ன? மறுபடியும் அவர்களைச் சேர்த்துக்கொள்வதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பி.ஏ., பி.எஸ்.ஸி. படித்தவர்களை டியூட்டர்களாக வைத்துக் கொண்டால் இன்ன சம்பளம் உண்டு என்று இரண்டாவது சம்பளக் கமிஷன் சொல்லிற்று. பி.எஸ்ஸி. படித்தவர்களை டியூட்டர்களாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. கல்வித் தரத்தை உயர்த்த, எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்களை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் கொள்கை அளவிலே முடிவெடுத்தது. ஒரு சிலர் நிரந்தரமாக எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் அப்படியே இருக்கிறார்கள். 2 ஆண்டு காலத்திற்கு மேலாக தாற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுத்துக்கொள்ள வாய்ப்புத் தரப்பட்டது. இரண்டு ஆண்டுக்குக் குறைவாக இருப்பவர்களை மட்டும் எடுத்துவிட்டு, எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களை மட்டும் நியமிப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்ததன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்கள், மீண்டும் எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை. எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்று தகுதி யுடையவர்களாக ஆக்கிக்கொள்வார்களேயானால், அந்த நிலைமை ஏற்படலாம். இப்போதே நிரந்தரமாக இருந்து, பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு இந்த வாய்ப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. தகுதியுடையவர் களாக ஆவார்களேயானால், மேற்கொண்டு அவர்கள் பதவி வகிக்க வாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்த ஆணையின்படி வேலையில் நிரந்தரம் ஆக்கப்பட்ட பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டதாரிகள் வேலையிலிருந்து நீக்கப்பட வில்லை என்றும், தற்காலிகமாக இரண்டு ஆண்டுகளுக்குள் பணிபுரிந்தவர்கள்

100-க்கு மேற்பட்டவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்றும் பதிலிலிருந்து தெரிகிறது. இந்த ஆணை பிறப்பிப்பதற்கு முன்னால் வேலையில் இருந்தவர்கள், தாற்காலிகமாக இருந்தால், 1975 வரை அவர்கள் வேலை பார்த்து, அதற்குள்ளாக எம்.ஏ. பட்டம் பெற்றுவிட்டால், அவர்கள் வேலையில் தொடரலாம் என்று மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு செய்து, தென் மாவட்டங்களில் அவர்கள் 1975 வரை வேலை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. அதே நிலையில் மற்ற பல்கலைக் கழகங்களிலும் முடிவு எடுக்கப் பட்டு வழங்கப்பட்டிருக்கிறதா? இப்போது வெளியேற்றப்பட்டவர்கள் எந்த மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறார்கள்?

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களுடைய முடிவுகளைப்பற்றி எனக்கு அதிகமாக விவரங்கள் தெரியாது. ஆனால் 55 கல்லூரிகளில், சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங் களுக்குட்பட்டவை, இதில் இருக்கின்றன என்று தெரிகிறது. வேண்டுமானால் அவைகளின் பெயர்களைப் படிக்கிறேன். உத்தமபாளையம், உசிலம்பட்டி, விருதுநகர் ஆகியவை இருப்பதால், மதுரைப் பல்கலைக்கழகமும் அடங்கி யிருக்கிறது என்று தெரிகிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல், மதுரைப் பல்கலைக் கழகம் தவணை கொடுத்து அவர்கள் பாஸ் செய்த பிறகும், பதவி நீக்கம் என்றால், அது பொருந்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது தனியார் கல்லூரிகளைப் பொறுத்து இருக்கலாம். அப்படியும் வேலை நீக்கம் செய்வதில்லை. தாற்காலிக வேலை நிறுத்தம் தான்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, உத்தரவு வந்த பிறகுதான் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த வகையில் அந்தப் பல்கலைக் கழகம் அவ்வாறு முடிவு செய்திருக்கிறது என்று தெரியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் வேலை நீக்கம் என்பதாகாது. மூன்று, நான்கு, ஐந்து ஆண்டுகளாக, பி.ஏ. பி.எஸ்ஸி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1974 சனவரி 23]

படித்தவர்கள் டெம்பரரியாக இருக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்து இந்த உத்தரவு இருக்காது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால், விவரம் பெற்றுத்தர முடியும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்படி நீக்கப் பட்டவர்கள் வேறு வேலைக்குப் போவதற்கு வயது வரம்பு குறுக்கே நிற்கும். ஒரு குறிப்பிட்ட வயதுக்குள், அதாவது 25 வயதுக்குள் என்று நினைக்கிறேன் வேலையில் சேரவேண்டும். அதனால் மற்ற வேலைக்குப் போக முடியாமல் போய் விடக்கூடாது. ஆகையினால் அவர்களுக்கு ஏதாவது கன்செஷன் கொடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுக்குள் இருப்பவர்களுக்குத்தான் இந்த உத்தரவு பொருந்தும் என்று கருதுகிறேன். சாதாரணமாக பி.எ., பி.எஸ்ஸி. படித்தவர்கள் 20 21 வயதுக்குள் முடித்துவிடுகிறார்கள். ஆகையினால் 22 அல்லது 23 வயதுக்குள் தான் இருக்கும். அப்படிப்பட்ட நெருக்கடி எதுவும் ஏற்படாது என்று கருது கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள் தற்சமயம் இருந்து வருகிறார்கள். அதற்குப் பின்னால் சேரக்கூடியவர்கள் எம். ஏ., எம்.எஸ்ஸி. படித்தவர்களாக வருகிறார்கள். அவர்களும் அந்தப் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படும்போது, இந்த உத்தரவு போட வேண்டிய அவசியம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த உத்தரவு தாற்காலிகமாக இருந்தவர்களை வேலை நீக்கம் செய்வது என்றுதான் குறிப்பிடுகிறது. நிரந்தரமாக இருந்தவர்கள் யாரையும் எடுக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டவர்களைப் பாதிக்காது என்று கருதுகிறேன். நிரந்தரமாக வேலையிலிருந்தவர்களை நீக்குவதாகக் கருதக்கூடாது. ஆகவே தான் இரண்டு ஆண்டுகாலம் என்று போடப்பட்டது. இல்லையேல் மூன்று, நான்கு, ஐந்து ஆண்டுகாலம் உள்ளவர்களையும் எடுக்க வேண்டிய நிலை வந்திருக்கும். அவர்கள் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். தகுதி உள்ளவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சி செய்யப்பட்டது. கல்லூரியின் கல்வித் தரம் உயர வேண்டும் என்று சொல்கின்ற வகையில், நிபுணர்களுடைய அறிக்கையும் அவ்வாறு கூறுவதால், எம்.ஏ., படித்தவர்களை வைக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, சில தனியார் கல்லூரிகளில், ஐந்து ஆண்டு காலமாகியும், அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லை என்று காரணம் சொல்லி, வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். தனியார் கல்லூரி களில் இந்த நிலைமை ஏற்பட்ட இடங்களில் மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதுபற்றி விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், ஆராயலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, எந்தெந்தக் கல்லூரிகளில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்று அரசுக்கு பல்கலைக்கழகம் மூலம் விவரங்கள் வந்திருக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. மீண்டும் தரப்பட்டால் ஆராயலாம்.

Non-teaching Staff.

* 34. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the non-teaching staff in aided High Schools have to attend schools during the school holidays and the summer vacation;

(*b*) if so, the details thereof; and

(*c*) the leave privileges for which they are eligible?

ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரிய ரல்லாத பிற பணியாளர்கள் பள்ளி விடுமுறை நாட்களிலும், கோடை விடுமுறையிலும் பள்ளிக்குச் செல்ல வேண்டுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அவர்கள் பெறத் தகுதியுள்ள விடுப்பு உரிமைகள் யாவை ?